[illegible]stered as a
[illegible] Paper in
[illegible]lon
[illegible]. M. G.
No. H. A.
[illegible]00 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆ
(1889)
ஆனணிமீ 28உ
ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10]

[...]ாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[...]த்-எஉ] யாழ்ப்பாணம்:- விகாரி ஹூ பங்குனி மீ உசூஉ வெள்ளிக்கிழமை (8 APRIL. 1960) [இல-உ]

# [...]ம்மாசனப் பிரசங்கம் தம்மொழியில் மட்டும் சிருட்டித்த சிங்கள மன்றம்

## [...]ங்கிலத்துக்குள்ள அபிமானங்கூடத் தமிழுக்கில்லையாம்!

### பதினெட்டு அங்கத்தவர்கள் இதை ஆட்சேபித்தனர்

**[...]ாட்டுப் பாராளுமன்றமா அல்லது சிங்கள மக்கள் மன்றமா என்ற கேள்வி எப்பொழுதும் எழுந்து கொண்டிருக்கும் வண்ணம் ஒவ்வொரு புதுப் பாராளுமன்றத் திறப்புவிழாவின்பொழுதும் இந் நாட்டு மக்களில் ஒருசாரார் புறக்கணிக்கப்பட்டு அவமதிக்கப்படுகின்றனர்.**

சிம்மாசனப் பிரசங்கம் [...]ம்மொழியி லிருக்கவேண்[...]ம் என்று மகாதேசாதி[...]தி அவர்கள் நினைக்கின்[...]றார்கள் என்பது வெளி[...]ாகிவிட்டது. நாட்டின் [...]ட்சிக் கொள்கையை வெளியிடும் சொற்பொழிவு நாட்டு மக்களுக்குரிய முறை[...]யில் அமையவேண்டுமென்[...]பதை அறியாதவர்கள் அரசு நடத்துவது வேடிக்கையே!

சிம்மாசனத்திலிருந்து தமிழ் உச்சரிக்கப்படக் கூடாதென்ற முடிபை ஒவ்வொரு புதுப்பாராளுமன்றமும் எடுத்துக் காட்டிய வண்ணமாயிருந்தால் அங்கு அந்த மொழிபேசுபவர்கள் ஏன் அங்கத்தவர்களாய் அமருதல் வேண்டும்?

தொடர்ச்சி 2-ம் பக்கம்

[...] அரசியல் அலை

# ஆர்குற்றியும் அரிசி ஆகட்டும்

## இடதுசாரியார் எடுத்த அடியை முடித்து வைத்தார் இடட்லி

பொதுத் தேர்தற் காலத்திற் பொழியப்பட்ட பேச்சுகளில் முக்கியமாக இடதுசாரிக் கட்சியார் எடுத்துரைத்த திட்டம் இப்பொழுது கவனத்துக்கு வந்துவிட்டது.

'எங்களை அனுப்புங்கள்- உங்களுக்கு அரிசி இருபத்தைந்து சதம்' என்று சொன்ன சமசமாசக் கட்சியினர் ஆட்சிபுரிய முடியவில்லை; ஆனால் அரசு நடத்தும் பொறுப்பேற்ற ஐ. தே. கட்சியோ உடனடியாக அரிசி விலையை அப்படியே இருபத்தைந்து சதமாக்கிவிட்டது. அடுத்த தேர்தலில் இடது சுலோகப் பல்லவி எப்படி எடுக்கப்படப் போகின்றதோ? யாரறிவார்?

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

### அகில இலங்கைச் சிவனடியார் கூட்டத்தினர் தமிழகப் பாத யாத்திரை

யாழ்ப்பாணத்தி லிருந்தும் திருக்கேதீச்சரத்தி லிருந்தும் அடியார்கள் சென்ற வருடம் பாதயாத்திரை செய்ததைப் போல இவ் வருடமும் வருடப்பிறப்பிற்கு முதல் நாள் புறப்பட்டு, பாண்டிநாட்டி[...]லுள்ள தலங்கட்குப் பாத[...]யாத்திரை செய்வார்கள். அங்கு அப்பர் சுவாமிகளின் குருபூசையையும் கொண்

### சீனாவுடையதாம் எவரெஸ்ற்

இமயமலையின் எவரெஸ்ற் சிகரம் சீனாவுக்குச் சேர்ந்ததென்று சீனா வாதிக்கத் தொடங்கியுள்ளது. இவ் வாதம் உலகெங்கும் பெரும் அதிர்ச்சியையுண்டுபண்ணியுள்ளது.

வைபவத்தில் முதலையாகின அடியார்கள் பங்குபற்றுவார்கள் என்று திரு. செ. [illegible] ந்தசாமி அவர்கள் தெரிவிக்

### நற்சிந்தனை

காணுங் கண்ணிற்
கலந்த கண்ணது
ஆணும் பெண்ணு
மலியு மானதே.

ஆதார ஆதேய
மானவப் பொருளின்
பாதார விந்தம்
பணிதல் பயனே.

சூதான தற்ற
வெளியிற் சுகமாய்
நீதா னிருத்தல்
நிச்சய மாமே.

(சிவ தொண்டன்)

### உ
### அகில இலங்கைச் சைவமகாநாடு

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் சார்வரி ஹூ சித்திரை மீ கஎ, கஅ, கசு-ம் (29, 30-4 60, 1-5-60) நாட்களில் ஓர் அகில இலங்கைச் சைவ மகா நாடு நடத்தப்படும்.

காஞ்சி ஸ்ரீமத் க. வச்சிரவேலு முதலியார் B.A; L T. அவர்களும், 'கலைமகள்' ஆசிரியர், ஸ்ரீமத். கி. வா. ஜகந்நாதன் M. A. அவர்களும் தலைமை வகித்து, சைவசமய விரிவுரைகள் நிகழ்த்துவார்கள். ஈழ நாட்டுப் பேரறிஞர்களும் சைவமகாநாட்டிற் பங்கு பற்றி, அரிய சைவசமய விரிவுரைகள் நிகழ்த்திச் சிறப்பிப்பார்கள்.

விரிவான நிகழ்ச்சி நிரல் பின்னர் வெளியிடப்படும்.

### திறப்பு விழா

மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் ஞாபகார்த்தமாக வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு வடக்கே அமைக்கப்பட்டுள்ள மணி மண்டபத்தின் திறப்புவிழா இம்மாத நடுப் பகுதியில் நடைபெறுதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் பல தமிழ்ப் பேரறிஞர்கள் இவ் விழாவிற் கலந்துகொள்வார்கள் என்றும் அறிய வருகின்றது.

# சார்வரி வருடப்பிறப்பு

## இன்புற்று வாழ்தற்கு அன்று நாம் செய்யவேண்டியவை

வருகின்ற புதன்கிழமை காலை 6-55 மணியளவில் அபரபக்ஷ துதியைத் திதியில் சுவாதி நட்சத்திரத்தின் மூன்ரும் பாதத்தில் தமிழர்களின் புதுவருஷமாகிய சார்வரி வருஷம் பிறக்கின்றது. புது வருஷத்தின் பலாபலனை அறிய ஆவல் கொண்டவர்களாய், பஞ்சாங்கங்களைக் கடைகளில் வாங்கி சங்கிராந்தி பலனையும், கிரகசார மாத பலன் முதலியவைகளையும் மக்கள் படிக்கிருர்கள். சித்திரைச் சங்கிராந்தி பலனைப் பார்க்கும்போது, இரட்டுமி வாத்தியத்தால் நாடகர் சுகமும், வைராக்கிய குணத்தால் சௌக்கியமும், துதியைத் திதியால் சுகமும், சுவாதி நட்சத்திரத்தால் நன்மையும், மச்சிரயோகத்தால் தானிய விருத்தியும், தைதில கரணத்தால் நன்மை விருத்தியும் உண்டாகும் என அறிகிருர்கள். ஏனையவைகள் பெரும்பான்மையும் தீமையாகவே அமைகின்றன.

ஸ்ரீ. சு. பஞ்சாட்சர ஐயர்

நற்பலன் நான்கு பங்கு எனக் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, நமக்கு ஓரளவு மகிழ்ச்சி உண்டாகிறது ஆகவே பிறக்கப்போகும் புது வருஷத்தை மகிழ்ச்சிகரமாகக் களிக்க விரும்புவோமேயானல், அன்றைய தினத்திலே நம்மால் இயன்ற அளவு நன்மைகளை எப்போதும் செய்வோமெனத் திட சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும். நம் வாழ்க்கை சீர்கெட்ட வாழ்க்கையாக அமைகிற தென்ருல் அதற்குக் காரணம் நாம் தீமைகளைச் செய்கிறோம் என்பதேயாகும். நம்மிடத்தில் பொருமை, பொய்மை, கள்ளுண்ணல், புலாலுண்ணல், வஞ்சகம், சூது முதலிய தீமைகள் குடிகொண்டிருக்கின்றன. நாம் தினந்தோறும் ஸ்நானம் செய்கையில் நம் உடல் தூய்மை

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# அகத்தூய்மையாலுண்டாகும் பெரும்பேறு

## இறைவனை இடைவிடாது தியானிப்பதால் எய்தக்கூடியது

இறைவனை இடைவிடாது தியானிப்பதால் மாத்திரமே அகத் தூய்மையடைதல் ஆகும். இறைவனைத் தியானித்தால் எங்கள் சிறுமையை நாம் உணரக்கூடியதாயிருக்கின்றது அப்பொழுது எங்கள் அகங்கார மமகாரங்கள் நீங்கி மனம் புனிதமாகின்றது மின்மினிப் பூச்சியைப் பார்த்தீர்களா? இருள் நேரத்தில் அது சிறிது ஒளியுண்டாக்குவதால் தன்னைப்பற்றிப்பெருமைப்படுகின்றது. சூரியன் பிரகாசிக்கும்பொழுது மின்மினிப் பூச்சியின் ஒளி அற்றுப்போவதுமல்லாமல் அப்படியொன்று இருப்பதே தெரியாமற் போகின்றது. அப்படியே சூரியன்களுக்குப் பரமசூரியனுகிய கடவுளின் முன்னிலையில், குறித்த மின்மினிப் பூச்சிகள்போல் நாம் அற்றுப்போகின்ருேம். கடவுள் எல்லாம் வல்லவர்; நாங்கள் அடிமைகள் என்ற எண்ணம் நீங்கி நாங்கள் கடவுளை மறப்போமானுல் எங்கள் அகங்கார மமகாரங்கள் மேலிடம் பெற்று எங்களைத் துன்பநெறிக்கு இட்டுச் செல்கின்றது. கடவுளை மறவாது இடைவிடாது தியானிப்போமானுல் நாங்கள் நல்வழியிலே எப்பொழுதும் சென்றுகொண்டிருப்போம்.

ஆகையினுலே, நாங்கள் இடைவிடாது கடவுளை நினைவுகூருவோமாக. அப்படி இடைவிடாது தியானித்தலாவது எப்பொழுதும் இறைவன் சந்நிதியில் வாழ்வதேயாகும். அத்தகைய வாழ்வு தூய்மையடைந்து அருட்பேறுடையதாகின்றது. இக்காலத்தில் நாங்கள் யாவரும் உலக வாழ்க்கையுள் அமிழ்ந்திக்கிடக்கின்ருேம். தேகமே

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பொருட் காட்சியும் களியாட்டு விழாவும்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியார் நடத்தும் பொருட்காட்சியும் களியாட்ட விழாவும் அரசாங்க மேறசபைத் தலைவர் சேர் சிறில் டி சொயிசா அவர்களால் சென்ற சனிக்கிழமை திறந்து வைக்கப்பெறறது.

பெருப்பான்மை சிறுபான்மைச் சமூகங்களுக் கிடையிற் கருத்து வேறுபாடுகளிருந்து வருகின்றன. நல்லெண்ணம் படைத்தவர்கள் சமூகங் களுக்கிடையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்துவார்கள். சமயப் பாடசாலைகள் பெருமளவுக்கு இத் துறையில் உதவ முடியும் என்று அவர் பொருட்காட்சி விழாவைத் திறந்த வைத்துப் பேசும் போது குறிப்பிட்டார்.

x x x

இரண்டாம் நாட் காட்சியும் விழாவும் யாழ்ப்பாணப் பிரதிநிதியும், நகரசபைத் தலைவருமான திரு ஏ. ரி துரையப்பா அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

## சிதம்பரம் ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை

### உயர் நிலைப்பள்ளி மாணவர் இலக்கியக் கழக ஆண்டு விழா

கொள்ளிடம் மார். 31

சிதம்பரத்திலுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையைச் சார்ந்த ஆறுமுக நாவலா உயர் நிலைப்பள்ளி மாணவர் இலக்கியக் கழகத்தின் ஆண்டு விழா, நேற்று மாலை அண்ணமலைப் பல்கலைக்கழகம் கல்வித்துறைத் தலைவரான பேராசிரியர் திரு ஆர். இராமாநுசாச்சாரியார் எம்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது,

பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. மு. கோவிந்தசாமிபிள்ளை எல்லோரையும் வரவேற்றார்.

அண்ணமலைப் பல்கலைக்கழகம் தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளரான வித்துவான் திரு எஸ். வேங்கடராம செட்டியார் வாழ்த்துரை வழங்கியபோது இந்நகரிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இவ்வுயர் நிலைப் பள்ளி ஒன்றில் தான் மாணவர் மாணவிகள் ஓரளவுக்கு கடவுள் சிந்தனையில் உள்ளவர்களாக இருந்து வருகின்றார்கள். இப்பள்ளியின் ஸ்தாபகரான ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் சைவமும் தமிழும் இருகண்கள் போலுள்ளன என்பதனை நன்கு உணர்ந்துதான் இவ்வூரில் சைவமும் தமிழும் நன்கு வளர்ச்சி பெறல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் இந்த வித்தியாசாலையை நிறுவியுள்ளார்கள் அந்தக் குறிக்கோள் தற்காலம் இப்பள்ளியில் ஓரளவுதான் நிறைவேறிக்கொண்டு வருகின்றது என்று கூறினர்.

திரு. மா. பாலசுப்பிரமணியன்
"தினமணி" நிருபர்

## எங்கள் அறிவித்தல்

நிகழும் பங்குனி 27உ (9-4-60) சனிக்கிழமை வண்ணை வைத்திசுவரன் கோயில் தேர்த்திருவிழாவின் பொருட்டும், பங்குனி 30உ (12-4-60) செவ்வாய்க்கிழமை தொடக்கம் சார்வரி ஞு சித்திரை மீ 3உ (15-4-60) வெள்ளிக்கிழமை வரையும் வருடப்பிறப்பின் பொருட்டும் சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் மூடப்பட்டிருக்குமென்றும், சித்திரை மீ 3உ (15-4-60) இந்துசாதன ஆங்கில தமிழ் வெளியீடுகள் வெளிவரா என்றும் அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

—அதிபர்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்
விகாரி ஞு பங்குனி மீ உசு உ வெள்ளிக்கிழமை

## மொழியுரிமைக்கு வழியில்லை!

வழமைபோல அரியாசனச் சொற்பொழிவு இந்நாட்டு மக்களில் ஒரு பகுதியினருக்கேயுரியதாய் அவர்களின் மொழியில் மட்டும் நிகழ்த்தப் பெற்றதை நினைந்து நாம் மனம் வருந்துகின்றோம். மக்கள் ஆட்சி முறையே மிகத் தகைமையுடையதென்றெண்ணுகின்றவர்கள் அனைவருள்ளத்திலும் இத்தகைய உணர்ச்சி உண்டாகுமென்பதற் கையமின்று.

ஈழம் வாழ் மக்களுக்கு அவர்களின் சார்பாகப் பாராளுமன்றத்தில் அமர்ந்திருக்கும் அத்தனை அங்கத்தவர்களுக்கும் வழங்கப்பெறும் சொற்பொழிவு அன்னாருக்குரிய மொழிகளில் நிகழ்த்தப்பெறுதல் நீதியும் நெறியுமாகுமென்பதை ஈண்டு எடுத்துரைக்க வேண்டியதில்லை. இவ்வுண்மை எந்நாட்டுக்கும் எப்பொழுதும் ஒப்பமுடிந்த முடிபு. அவ்வாறிருக்க எங்கள் நாட்டில் நிலவி வரும் இருமொழிகளில் ஒன்றாகும் தமிழுக்கு மக்கள் மன்றத்தில் உரிய இடம் அளிக்கப்படாதிருப்பது உண்மைக்கும் ஒழுக்கத்துக்கும் மாறான அறம் பிழைத்த செயலாகும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றோம். அந்நியரின் மொழியாம் ஆங்கிலத்துக்கு அந்த இடத்தில் உரிமையுண்டாம்; ஆனல் இந் நாட்டு மொழியாகும் இன்பத் தமிழுக்கு எள்ளளவும் உரிமையில்லையாம். என்னே இறுமாப்பின் உச்சநிலை!

இது ஒருபுறம் இருக்க, அன்று பாராளுமன்றத் திறப்புவிழாவிலே தமிழ் பேசும் அங்கத்தவர்கள் கலந்து கொள்ளாது தமிழ் மக்களின் உள்ளத் துணர்ச்சியை எடுத்துக் காட்டிய செயலைப் பற்றி மகாதேசாதிபதியவர்களோ அல்லது தலைமை அமைச்சரோ அன்றி ஏனைய கட்சித் தலைவர்களோ ஒன்றும் பேசாதிருப்பது விபரீதமாய்த் தோன்றுகின்றது. தமிழ்பேசும் அங்கத்தவர்களின் தோள்களிலே சார்ந்து ஆட்சிப் பீடத்திலே அமருவதற்கு ஆசைப்படும் கட்சித் தலைவர்களின் போக்கு என்ன என்று கேட்கின்றோம்? சிறீ இலங்கா சுதந்திரக்கட்சியின் சிரமத்தினல் மொழி உடம்பாடு ஒன்று பண்டாரநாயக ஆட்சிக் காலத்தில் உருவானதல்லவா? நியாயமான அளவுக்குத் தமிழ் மொழி பயன்படுத்தப் பெறுவதற்குறுதுணையாய்ச் சட்டமியற்றுகின்றோம் என்று பறை சாற்றிய இக்கட்சியினர் சிம்மாசனப் பிரசங்கம் தமிழ்மொழியிலும் நிகழ்த்தப் பெறுதென்ற முடிபு செய்யப்பெற்ற பொழுதே தமிழ் பேசும் அங்கத்தவர்களுடன் சேர்ந்து பாராளுமன்றத் திறப்புவிழாவிற் பங்குபற்ற மாட்டோமென்று உண்மையான உணர்ச்சியை ஊர்றியக்காட்டியிருக்கலாமல்லவா? 'எங்களுடன் சேருங்கள்-உங்கள் உரிமைகள் ஒன்றையும்மறுக்கமாட்டோம்' என்று தங்கள் காரியம் பார்க்கப் போலி அபிமானங் காட்டுங் கட்சிகளைத் தமிழ்பேசும் அங்கத்தவர்கள் நம்ப முடியாதென்பதை ஆட்சி அமைக்க ஆதரவு கோரும் அனைவரும் அறிவார்களாக.

x x x

### நம்பிக்கை கொள்வோம் புத்தாண்டு நல்வரவில்

இறைவனைத் துணை என்று எண்ணுகின்றவர்களுக்கு எப்பொழுதும் நம்பிக்கையுண்டு. ஆண்டு தோற்றுவதும் மறைவதும் புத்தாண்டு புகுவதும் கால நிகழ்ச்சிகள். இயற்கை என்னும் இறை ஒழுங்கில் அமையும் இம் மாற்றத்தில் அவன் அருளை எதிர்பார்ப்போமாக; திருவருள் பெறுவதற்கு இறைவனை இடையறாது எண்ணி எந்தை நாமம் உரைத்து, தெய்வப்பணி ஆற்றி வருவதே வழி.

எங்கள் நாட்டில் அரசியல் பிழைத்து விட்டது என்பதுண்மை. மக்கள் அனைவரும் உரிய உரிமைகளைப் பெறாது அல்லற்படுகின்றனர் என்பதும் உண்மை. ஆனல் அல்லல் அகற்ற வழி உண்டு. எல்லையிலாத இறைவனிடம் முறையிடுவதே முறை இந்த நெறியில் நின்று திருத்தொண்டர்கள் சைவ நீதியை மாநிலத்தில் நிலை நாட்டினர். ஆகையால் பூக்கை கொண்டு அரன் பொன்னடி போற்றிப் புத்தாண்டிற் பொலிந்த உள்ளமும் புனித நெறியும் அமையும் வண்ணம் சைவச் சால்பில் வாழ்வோமாக.

x x x

### யாழ் இந்துக்கல்லூரி நிதி இயக்கம்

சைவ நெறிவழுவாது வாழ்ந்த நம்முன்னேரால் நாவலர் நற்றகையாரின் தெய்வப்பணியைத் தொடர்ந்து நிறுவப்பெற்று வளர்பிறைபோல வளர்ந்துவரும் யாழ்ப்பாணப இந்துக்கல்லூரி, ஈழநாட்டுக்கொரு கலை அணியாக விளங்குகின்றது. இத்தகைய பெறறிவாய்ந்த நிலையம மேலும் விருத்தியடைவதற்குப் பொருள்திரட்டுவதற்காக இப்பொழுது நடைபெறும் களியாட்ட விழாவும் கண்காட்சியும இந்நாட்டு மக்களின் உள்ளம் உவந்த உதவியைப் பெறும் என்று நாம் நம்புகின்றோம். நன்கொடை அளிக்குப அன்பர்களும் விழாவிற் கலந்து பொன் கொடுப்பாரும் நாவலர் நாட்டின் கலைத் தொண்டாற்றும் மேன் மக்கள் ஆகின்றனர் என்று நல்லாசி கூறி இந் நிகழ்ச்சி இறைவன் இன்னருளால் நன்கமையும்வண்ணம் வாழ்த்துகின்றோம்.

### எதிர்க்கட்சியின் திருத்தங்கள்

சமஷ்டி அரசியலமைக்க வேண்டுமென்று ஒன்றும், மொழியுரிமை முதலியவை பற்றி மற்றொன்றுமாய் சிம்மாசனச் சொற்பொழிவுக்கு இரு திருத்தப் பிரேரணைகளைத் தமிழரசுக்கட்சியார் பிரேரிப்பர்.

எதிர்க்கட்சிகளெல்லாம் சேர்ந்து அரசாங்கத்தில் நம்பிக்கையில்லையென்னும் பிரேரணை பிரேரிப்பது பற்றியும் எதிர்க்கட்சியினர் ஆலோசனைகள் செய்கின்றனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பொருட் காட்சியும்
களியாட்ட விழாவும்
(ஜுபிலி கட்டட, பட்டதாரிவகுப்பு கட்டட நிதிக்காக)
2-4-60 முதல் 24-4-60 வரை
உன்னத கல்விப் பொருட்காட்சி
கலைகள், விஞ்ஞானம், கைவேலை சமுகப்பாடம், இலக்கியம் முதலியபகுதிகள் சம்பந்தப்பட்டவை
மின்சார ஒளிமய கல்லூரி ஆட்டங்கள்,
போட்டிகள், கைவன்மை ஆட்டங்கள்,
சுழலும் குதிரைகள், பாதாளக் கிணறு,
சங்கீதம், நடனம், நாடகம், சர்க்கஸ் முதலியன.
பிரவேசச் சீட்டுக்களில்
தினசரி அதிட்ட இலாபச் சீட்டிழுப்பு
பெரிய பரிசுகள்
அரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள்

## முன்மாதிரியாய் விளங்கிய தமிழ் முனிவர்

### மகா வித்துவான் பிரம்மஸ்ரீ. கணேசையா நினைவு விழாவிற் பாராட்டுரை

"உயர்ந்தோன் யாவன்? என்ற வினாவிற்கு விடை பகரின் எவன் தன்னைத் தாழ்ந்தோனுகக்கருதி நடக்கிறானே அவனே உயர்ந்தவன் என்பது வெளிப்படும் எவன் தன்னை உயர்ந்தோனுக மற்றவர்கள் மதிக்க வேண்டுமென விரும்புகிறானே அவன் யாவரிலும் கீழானவன். இக்கருத்துகள் ஈழந்தந்த தமிழ் முனிவராம் மகாவித்துவான் கணேசையா அவர்களை நினைக்கும்போது பலரின் உள்ளங்களில் எழுவனவாகும்'! என்று மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் வசந்தமண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்துசமய விருத்திச்சங்க ஆதரவில் நடைபெற்ற ஸ்ரீ கணேசையர் நினைவு விழாவில் பிரதம சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட பண்டிதர் திரு. இ. நமசிவாயம் அவர்கள் கூறினர். விழாவிற்கு பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக் குருக்களவர்கள் தலைமை வகித்தார். ஐயா அவர்

(தொடர்ச்சி 5 ம் பக்கம்)

### சிம்மாசனப்பிரசங்கம் தம்...

(முதற்பக்கத் தொடர்ச்சி)

சமஷ்டிக் கட்சி அங்கத்தினரும், வவுனியா, யாழ்ப்பாணப், உடுப்பிட்டி அங்கத்தினரும் திறப்புவிழா வைபவத்திற கலந்துகொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடலாகுமா கீரிமலைப் புனிதத் தலத்தையும்?

## சைவ மக்களே ஒன்றுகூடி உடனே ஆவன செய்மின்

இலங்கைத்தீவு சிவபூமிகளுள் ஒன்று. மிகவும் பழையகாலம் தொடக்கம் பறபல சிவஸ்தலங்களும் சிவ சந்நிதிகளும் இலங்கையில் இருந்து வந்திருக்கின்றன. அவற்றுள் பெரும்பான்மையன இன்று மறைந்து விட்டன. யாழ்ப்பாணத்தில் இன்று அருமை பெருமையாக விளங்கும் இரண்டொரு சிவஸ்தலங்களுள் மிகவும் முக்கியமானது கீரிமலையிலுள்ள சிவஸ்தலமாகும், கீரிமலை க்ஷேத்திரம் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. மிக மிகப் புராதனயானது. புண்ணியத்தன்மை வாய்ந்த புனித சங்கமத் தீர்த்த விசேடமுடையது. வங்கதேசத்திலிருந்து வந்து இலங்கையை அரசாண்ட விஜயராசன் காலத்தில் அது 'திருத்தம்பலேச்சரம்' என்னும் பெயரோடு விளங்கி வந்திருக்கிறது. பின்னர் நகுலமுனிவர் என்னும் தபோதனரின் மகத்வம் பொருந்திய தொடர்பினல், நகுலேச்சரம் எனவும் நகுலகிரி எனவும் கீரிமலை எனவும் சரித்திர புராண இதிகாச நூல்களால் குறிக்கப்பட்டு வந்திருக்கிறது யாழ்ப்பாணத்தில அந்தக் காலத்தில் இருந்த சித்தர்களும், முனிவர்களும் தபோதனர்களும் கீரிமலை க்ஷேத்திரத்தையே தமது தவ வாழ்விற்கு வாய்ப்பான சிவபூமி எனக்கருதி வந்திருக்கின்றனர் யாழ்ப்பாண நாட்டின் சிரசாய், மூலஸ்தானமாய் விளங்குவது கீரிமலை க்ஷேத்திரம் எனக்கூறின், அது மிகையாகாது. நகுலமுனிவர் என்னும் தபோதனர்க்கு அவருடைய கீரி முகத்தை மாற்றிய தீர்த்தம் 'கங்காசங்கமப் புணரி' என்றும் 'பாதாள கங்கை' என்றும் அழைக்கப்படுகிறது. அந்தத் தீர்த்தம் பிரசித்திவாய்ந்த நகுலகிரிக் குகையின் கீழ்த்திசையில் உள்ளது, அது தென்திசையிலிருந்து ஊறி வருகின்ற சுத்த நீரும், கடலின்கண்ணுள்ள உப்பு நீரும் ஒருங்கு வந்து சங்கமிப்பதனல், சிவசக்தி சொரூபமாய்த் திகழ்வது. இன்றைக்கும், இந்தத் தீர்த்தத்தில் அளவில்லாத சைவ சமயிகள் விதிப்படி ஸ்நானம் செய்து வேண்டிய சித்திகளைப்பெற்று வருகின்றனர். அந்தக்காலத்தில் சோழ மஹாராசாவின் புதல்வியாகிய மாருதப்புரவீகவல்லி என்னும் அரசிளங்குமாரி இந்த மஹத்வம் பொருந்திய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துதான், தன் குதிரை முகம் மாறப்பெற்றதும், குன்ம நோய் நீங்கப் பெற்றதும் பிறவி நோய் தீரப்பெற்றதும் ஆகும், இவ்விராஜகுமாரி வந்து கீரிமலை க்ஷேத்திரத்தில் தங்கியஸ்தலம் தற்போதும் குமாரத்திபள்ளமென வழங்கப்படுகிறது. நகுலகிரி மலை மீது இன்றைக்கும் ஒரு பன்னீர் மரத்தை நாங்கள் காண்கின்றேம். அது மிக மிகப் புராதனமான விருட்சமென்றும் நகுலமுனிவர் முதலான முனீந்தரர்கள் வழி வழியாக நிஷ்டைகூடி மஹா சமாதி நிலை எய்திய புனிதஸ்தானம், அந்த விருட்சத்தின் நீழலையாகுமென்றும் பெரியோர் கூறுவர். கலியுகவரதராகிய சிவசுப்பிரமணியசுவாமி சூரபதுமனைக் கொன்று கதிரைமலையை ஆண்டதன் பின்னர் இந்த யாழ்ப்பாண வழியினூற்ருன் கந்தவெற்பிற்குச் சென்ருரென்றும், அவ்வாறு செல்லுகையில் நகுலகிரியின் சமீபத்திலிருந்த ஓராலயத்தில் தங்கிச் சென்ருரென்றும் அந்த ஆலயந்தான் பிற்காலத்தில் கதிரையாண்டவரின் ஆலயம் என்ற பெயரைப் பெற்றதென்றும் நகுலகிரி வரலாற்று நூல் கூறுகின்றது.

இத்துணைப் பெருமை வாய்ந்த கீரிமலைப் புண்ணிய க்ஷேத்திரம் தமிழ் மக்களின் இயற்கையான சோம்பல் காரணமாகவும், அன்னிய அரசாட்சியாரின் ஆளுகை காரணமாகவும் தன்னுடைய இயறகைப் புனித நிலையிலிருந்தும் நழுவி சேபைகுன்றி மங்கிக்கொண்டு வருகின்றதே என நினைந்து நினைந்து நாங்கள் மிகவும் வருந்திக்கொண்டு வருகின்றேம். இதற்கிடையில் இன்றைய அரசினர் தமது "சிமேந்து" தொழிநசாலைக்கு வேண்டிய கல் முதலிய மூலப் பொருட்களைப் பெறுவதற்கு காங்கேசந்துறையிலிருந்து கீரிமலை செல்லும் வீதிக்கு வடபாலுள்ள நகுலகிரி மலையையும் பக்கலில் இருக்கும் நிலங்களையும் வாங்குவதற்கு உத்தேசித்திருக்கிருர்கள் என்று அறிகின்றேம்.

இந் நிலங்களி லிருக்கும் புண்ணிய தலங்கள் பின்வருவன: 1 மலையில் பிள்ளையார்; 2 நகுலகிரிக்குகை, 3 நகுலகிரி மலை, 4 திருத்தம்பலேஸ்வரலிங்கப் பெருமாள் கோவில், 5 நகுலமுனிவர் இருந்து தவம் புரிந்த புராதன பன்னீர்மரம், 6 புவனேஸ்வரி அம்பாள் கோவில் ஸ்ரீமதிசடையம்மா அவர்கள் சமாதி) 7 சிவசங்கர யோகேஸ்வரி கோவில், (ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர சுப்பையாசுவாமிகள் சமாதி), 8 கங்காசங்கம புணரி தீர்த்தம் (பாதாள கங்கை) 9 கதிரை ஆண்டவர் ஆலயம், 10 கிருஷ்ணன் கோவில், அந்த நிலங்களை விற்பதற்குச் சிற்சிலர் முன்வந்திருக்கிருர்கள் என்றும் ஓர் வதந்தி உலாவி வருகின்றது. அந்த வதந்தி உண்மையோ பொய்யோ என்பதை நாங்கள் அறியோம். அந்த வதந்தி உண்மையாயின், அரசாட்சியினர் தாம் மேற்கொண்டிருக்கும் திட்டத்தைத் தாமாகவே உணர்ந்து கைவிடக்கூடிய முறையில் நாங்கள் அனைவரும் திருவருளைத் துணைகொண்டு ஒன்றுகூடி [illegible] கூட்டங்கள் மூலமாகவும் செய்தித்தாள்கள் மூலமாகவும் அரசினருக்கு உண்மையை உணர்த்தி கீரிமலை க்ஷேத்திரத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாப்பதற்கு இனிமேலாயினும் முன்வருதல் வேண்டுமெனப் பணிவுடன் சைவ மக்கள் அனைவரையும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகின்றேம் என்று சிவஸ்ரீ அகோரசிவகுருநாதன், வைத்திய கலாநிதி க. குருசாமி, திரு. கு கதிரை ஆண்டி, திரு மு. ஞானப்பிரகாசம், திரு. சி இராமநாதன் ஆகியோர் மேற்கண்டவேண்டுகோளை வெளியிட்டு குறித்ததொண்டில் உடனே ஈடுபடுமாறு சைவமமக்களை அழைத்து நிற்கின்றனர்

## திருநாவுக்கரசு நாயனர் குருபூசை

திருவருளை முன்னிட்டு, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில், நிகழும் சார்வரி ஞூ சித்திரை மீ கூஉ (21-4-60) வியாழக்கிழமை திருநாவுக்கரசுநாயனர் குருபூசை கொண்டாடப்படும்.

நிகழ்ச்சிகள்:

மு ப. 9 — பி, ப. 1.

சிவபூசை மண்டபத்தில் சிவபூசை, கடவுளாராதனை, நால்வர் பூசை, பெரிய புராணம், புராணபடனம், திருநாவுக்கரசு நாயனர் புராணம் — திருவடி பெற்றபாகம், மாகேசுரபூசை.

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்.
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
5-4-60.

## கை லஞ்சக் குற்றச்சாட்டுக்குள்ளான மந்திரிகள்

உதவி மந்திரியாயிருந்த ஸ்ரீ டி. பி. மொன்னசலமவுடன் பகிரங்க வேலைப்பகுதி அமைச்சராயிருந்த ஸ்ரீ ஹென்றி அபயவிக்கிரம, தபாற்பகுதி அமைச்சராயிருந்த ஸ்ரீ சி ஏ. எஸ் மரைக்காயர் ஆகியோர் மீதும் கைலஞ்சக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன முந்தியவர்மீதுள்ள குற்றச்சாட்டு விசாரிக்கப்படுகின்றது. பிந்திய இருவர்மீதுமுள்ள குற்றச்சாட்டுகள் 19-4-60 ல் விசாரிக்கப்படுமென்று கூறப்படுகின்றது.

நேயர்கள் நெஞ்சம்

## திருக்கேதீச்சரத் திருவிழா

"தென்னுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என மணிவாசகப்பெருமான் கூறிய பரம்பொருள் சர்வ உலக இயக்கத்திறகெல்லாம் மூல காரணமாய் இருக்கிறது. பரம் பொருளை அணுக, அணுக இன்பம் பெருகும். அகல அகலத் துன்பம் நிகழும். இறைவனைச் சகலரும் வழிபடுதற்குச் சாதகமாய் முன்னேர்கள் திருவிழாவை நடத்தினர். பண்டுதொட்ட திருவிழாவை உயர்ந்ததொன்ருகக்கொண்டு, உரிய முறையில் இன்றும் மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

"சித்திரை பிறந்தால் திருவிழாப்பிறக்கும்" என்ற ஆன்றேர் மூதுரைப்படி நம் தமிழகச் சிவாலயங்கள் எல்லாவற்றிலும் சித்திரை மாதத் தொடக்கமாகத் திருவிழா ஆரம்பிக்கப்படுகின்றது அதுபோல யாழ்ப்பாணத்திலும் பல கோயில்களில் திருவிழா ஆரம்பிக்கப்படுகிறது. அரசியற் றேர்வுகள் எப்படி அமைதியாய் நடைபெற்றனவோ அதேபோலக் கோயில் திருவிழாக்களும் அமைதியாக நடைபெற வேண்டும். ஆலயங்களில் அமைதி நிலவ வேண்டும். அமைதி நிலவாமனல் அந்த இடம் ஆன்ம ஈடேற்றத்துக்கு உகந்ததாகும்.

இலங்கையில் மிகப் பிரசித்திபெற்ற தலமாகிய திருக்கேதீச்சரக்கோயிலில் வழமை போல் அலங்காரத் திருவிழா சித்திரை மாதம் பௌர்ணமை தொடக்கமாகப் பதினைந்து நாள் வரையில் நடைபெறும். அத்தருணம் சைவ அடியார்கள், மாணவர்கள் ஆசிரியர்கள் முதலானேர் சென்று வழிபாடாற்றி, திருத்தொண்டுகள் செய்து திருவருளைப் பெறவேண்டும் எனக்கூறி கௌரியம்பாள் சமேத கேதீச்சரப் பெருமானது அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

கேதீசர் செல்வன்
திருக்கேதீச்சரம்
3-4-60.

## அமைதியின்மைக்குக்காரணம் அகங்காரமே

கற்பதிலும் வழிபடுவதிலும் பிறருக்குப் பிரசங்கம் செய்வதிலும் மனிதன் அதிக நேரத்தைச் செலவிடுகிருன். ஆனல் தன்னைத்தானே தியாகஞ் செய்ய அவன் இன்னும் முன்வரவில்லை, இதனற்ருன் உலகம், புத்தம் பிரிவினை சாதிமதப் பூசல் என்பவற்றில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது.

உலகத்தில் எந்த உயிருமே மரணத்தை விரும்பவில்லை. எல்லோரும் வாழத்தான் விரும்புகிருர்கள். இந்த வாழ்வுக்காகவே அதாவது இன்பமாகச் சீவிப்பதையே நமது மூச்சாகவும் பேச்சாகவும் கொண்டிருக்கிறேம். உலக சமாதானத்துக்காகவும் மனித சமுதாயத்தின் நிரந்தர அமைதியின்பொருட்டும் நாம் பாடுபட்டதெல்லாம் வெறும் கனவாகிவிடுகின்றன. வாழ்வு என்பது இன்பத்தை நாடுவதுதான் என்பதை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆயினும் நிலையான இன்பத்தைப் பெறமுடியவில்லை. யான் என்னும் செருக்கு அகலாத வரை எவ்வாறு நிலையான இன்பம் பெறமுடியும்? இந்த "நான்" தான் உலகஅமைதியின்மைக்குக் காரணமாயிருக்கிறது.

வண்ணை வைத்தீசுவரவித்தியாலயத்தில் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் தலைமையில் சொற்பொழிவாற்றும்போது கோலாலம்பூர் சுத்த சமாசத் தலைவர் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தா அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்கள்.

## சதானந்தவித்தியாசாலைக்கு மேலும் பல வெற்றிகள்

29-3-60 இல் நடைபெற்ற வலிகாமம் வடக்குத் தமிழ்ஆசிரிய சங்க வெண் பொன் விழாவிலே பல பாடசாலைகளின்கதம்பநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அவற்றில் அளவெட்டி சதானந்தவித்தியாசாலை பின் வரும் மூன்று முக்கிய வெற்றிகளை ஈட்டியுள்ளது.


நடனம்: மேற் பிரிவு; முதலாம்பரிசு
பாட்டு: மேற் பிரிவு இரண்டாம் பரிசு
நாடகம்: மேற் பிரிவு இரண்டாம் பரிசு

இவற்றிற்குரிய பரிசில்களையும் சான்றிதழ்களையும் திருமதி சோமசேகரம் அவர்கள் வழங்கினர்கள்.

## ஆயுர்வேத முன்னேற்றம்

ஆயுர்வேத வைத்தியம் முன்னேற்றமடைய உதவும்சட்டமொன்றை விரைவில் அமைக்கப்போவதாக சுகாதாரமந்திரி வைத்திய கலாநிதி எம். வி. பி. பீரிஸ் தெரிவித்துள்ளார்,

ஆயுர்வேத ஆராய்ச்சிக் குழு ஒன்றும் ஆயுர்வேத வைத்தியரின் நடைமுறை ஆட்சிக் குழு ஒன்றும் அமைப்பதுபற்றி இப்பொழுது ஆலோசனை செய்யப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரத் தேர்தல்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாதரவில் இந்த "ஏப்பிறில்" மாதம் 23-ந் தேதி வரையில் ஒரு தேவாரத் தேர்தல் நடைபெறும். அத்தேர்தலிற் சித்தியடையும் பிள்ளைகளுக்கு ஆண்களுக்கு வேறாகவும் பெண்பிள்ளைகளுக்கு வேறாகவும் மேற்பிரிவு, மத்தியபிரிவு, ஆரம்ப பிரிவு என்ற பாகுபாடுகளின்படி ஒவ்வொரு பிரிவுக்கும் மூன்று பரிசில்கள் ஷ்டி சபையாதரவில் "ஏப்பிரில்" மாதம் 29-ந் தேதி வரையில் நடைபெறும் அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் வழங்கப்படும். அத்தேர்தலிற் சேரவிரும்பும் பிள்ளைகள் தங்கள் முழுப்பெயரையும் வயதையும் குறித்துத் தலைமையாசிரியருடைய கைச்சாத்துடன் தங்கள் நுழைவுப் பத்திரங்களை 8-4-60 க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிவைப்பார்களாக.

[ பாடத்திட்டப் பிரதிகள் வேண்டுவோர் எழுதிப்பெறுக. ]

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்
8-2-60.

# தொழில் நுட்பக்கல்லூரி

( *SCHOOL OF TECHNOLOGY* )

யந்திர கைத்தொழிற் சமாசத்தாரால்
அமைக்கப்பெற்றது.

Established by
The Engineering & Industrial Company Limited.

1960 ம் ஆண்டு ஜனவரி 18 ந் திகதி தொடக்கம் 52 வாரங்களுள்ள 4 கல்வித் தவணைகளில் பின்வரும் துறைகளில் கல்வி கற்பிக்கப்படும்.

(அ) மின்சார யந்திர வேலை (இலண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் பரீட்சை). இங்கிலாந்து மின்சார யந்திர நிபுணர்கழகத்தார் நடத்தும் முதற்பகுதிப் பரீட்சைக்கு ஏற்றதாக இக் கல்லூரி வகுப்பைக் கணிக்கச் செய்தற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

(ஆ) வானொலிக் கருவி வேலை (சிற்றி அன்ட் கில்ட்ஸ் பரீட்சை )

(இ) அளத்தல் மட்டப்படுத்துதல் (அளப்புப் பகுதித் தலைவர் அதிகாரச் சீட்டு வழங்கும் பரீட்சை)

(ஈ) படம் வரைவோர் பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு, அளப்புப் பகுதித் தலைவரின் உத்தரவுபெற்ற படம் வரைவோர் அதிகாரப் பரீட்சை.

(உ) பி. எஸ். சி. (Econ. முதல் வருடம் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பு இகொனமிக்ஸ் (பொருளாதாரம்) 3 கல்வித தவணைகள் (இலண்டன் சர்வகலாசாலைப் பரீட்சை)

எஸ். எஸ். சி. அல்லது அதை ஒத்த வகுப்பிற் படித்த மாணவரின் விண்ணப்பங்களே ஆலோசனைக்கு அங்கீகரிக்கப்படும்.

விடுதி ஒழுங்கு இருக்கின்றது.

பத்திரங்கள், விளக்கப் புத்தகங்கள் பிறவிபரங்கள் என்னிடமிருந்து பெறலாம்.

த. சிற்றடல்
சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.

விக்ரர் ஜே. இராசையா
தலைமை ஆசிரியர்,

## மகோற்சவங்கள்

—0—

இணுவில் சிவகாமியம்மைகோயில் மாதகல் பாணுகவெட்டியம்மைகோயில், சுன்னுகம் ஐயனார்கோயில் திருகோணமலை பத்திரகாளிகோயில், நல்லூர் நல்லைநாதர்கோயில், இருபாலை மதுரை முத்துமாரி கோயில் மூளாய் முத்துக்குமாரசுவாமி கோயில், தெல்லிப்பழை மாரி கோயில், காரைநகர்ச் சிவன்கோயில் கண்டி செல்வ விநாயகர் கோயில் கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோயில் உடப்பு ஐயனார் கோயில் பங்குனி 27 உ (9-4-60) சனிக்கிழமைதேர், 28உ (10-4-60) ஞாயிற்றுக்கிழமை தீர்த்தம். கரவெட்டி யார்க்கருவினாயகர்கோயில், பண்ணுகம் விசுவத்தனை முருகமூர்த்திகோயில், பங்குனி 28 உ (10-4-60) ஞாயிற்றுக்கிழமை தேர் தீர்த்தம்.

மானிப்பாய் மேற்கு அரசடிப் பிள்ளையார்கோயில், புங்குடுதீவு கிழக்கு வரசித்தி விநாயகர்கோயில் இடைக்காடு புவனேஸ்வரி கோயில். அல்வாய் வடக்கு ஆதி வீரபத்திரர்கோயில் பங்குனி 28 (10-4-60) ஞாயிற்றுக்கிழமை தேர், 29 (11-4-60) திங்கட்கிழமை தீர்த்தம்.

மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில் சார்வரி ஹு சித்திரை 1உ தேர் 2உ. தீர்த்தம்.

## ஈழகேசரிப் பொன்னையா நினைவு நாள் விழா

—0—

ஷ்டி விழா 3-4-60 ஞாயிற்றுக்கிழமை காலை குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் திரு. க. காராளசிங்கம் B.Sc. அவர்கள் தலைமையில் நடைபெற்றது தலைவர் அவர்களின் முன்னுரையின் பின் திரு. கனக செந்திநாதன் திரு செ கோவிந்தசாமி திரு. க பொன்னம்பலம் ஆதியோர் திரு. பொன்னையா அவர்களின் குணுதிசயங்கள் சேவைநலம் முதலானவற்றைக் குறிப்பிட்டுப் பேசினர். பின் திரு. த. இராசரத்தினம் அவர்களால் நன்றியுரை கூறப்பட்டதும், அன்பர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை 6 மணியளவில் கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்கள் தலைமையில் மலாய்நாட்டுச் சுவாமி சத்தியானந்தா அவர்கள் சமரசசன்மார்க்கம் என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினர்.

## COMMISSION SALE
## விற்பனவு விளம்பரம

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டின் 162 G ம் இலக்க பராபரிப்புத் தத்துவ வழக்கில் குறித்த கோட்டாரால் 1960-ம் ஆண்டு மாசி மாதம் 26-ம் திகதி எனக்கு விடப்பட்ட கொமிஷன் கட்டளையின் பிரகாரம் பின்னுல் காணப்படுவதும், தொண்டமானுறு (1) இராசேந்திரம், ஜெயசுந்தரா (2) இராசேந்திரம் மகள். விமலாசனி (3) இராசேந்திரம், இரத்தனலிங்கம் (4) இராசேந்திரம் மகள் கனகாதேவி (5) இராசேந்திரம் மகன் பாலேன்டிரு ஆகிய பராயமற்றவர்களுக்கும் உரியதுமான காணி.

பராபரிப்புக்காறி மயில்வாகனம் இராசேந்திரம் கைம்பெண், இரத்தினேஸ்வரி தொண்டைமானுறு.

1960-ம் ஆண்டு சித்திரைமாசம் 30 திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் குறித்த ஆதனத்தை குறித்த ஆதனயிடமாக நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக்கோயிற்பற்று கெருடாவில் இறை செம்பன் குன்று ஏககர் 1 றூட் 2 பேட்சஸ் 7.ம் செம்பன் குன்று ஏக்கர் 5 றூட் 0 பேட்சஸ் 10-ம் மரக்கார் வடலி றூட் 3 பேட்சஸ் 23-ம் சேர்ந்து ஏககர் 7 றூட் 2. இது உலாந்தா பேஸ்த்தர் K. வேலமுருகு அவர்களால் 1959-ம் ஆண்டு ஆனி மாசம் 12-ம் திகதி 3421-ம் இலக்கதில் அளந்து விந்தாரிக்கப்பட்ட படத்தில் 1-ம் துண்டுககு ஏககர் 2 றூட் 1 பேட்சஸ் 35. இதற்கு எல்லை கிழக்கு றேட்டுக்கு விடப்பட்ட நிலம். வடககு சின்னககண்டு பெண் சீனியம்மாவுகதும் மறுபேருககுமுடைய வாதனம். மேற்கு ஆறுமுகம் சிவசம்புவுக்தும் மறுபேருககுமுடைய வாதனம் தெற்கு குறித்த பராயமற்றவர்களுக்குரிய குறிதத படத்தில் 5-ம் துண்டுக் காணியும் மறுபேருக்குமுடைய வாதனமும்; இதில் றேட்டுக்காக விடப்பட்ட நிலதத்திற்கு தென்கிழக்கும் குறித்த 5-ம் துண்டுககு வடக்கே உள்ளதுமான நிலப்பரப்பு 10-ம இதைச் சேர்ந்தனவாகும்.

V M. KANDASAMY
Commissioner of sales
&
Valuator.

வல்வெட்டித்துறை,
30-3-60.
M 4 8-4-60.

## சிங்களச் சுற்றுநிருபம்

மாகாண வித்தியாகந்தோர்கள் தமிழ் ஆசிரியர்களுக்குச் சிங்களச்சுற்று நிருபங்களையும் கடிதங்களையும் அனுப்புகின்றன இவற்றை விளங்க முடியாமல் ஆசிரியர்கள் வருந்துகின்றனர். சுற்றுநிருபங்கள் கடிதங்களைத் தமிழில் அனுப்புமாறு ஒழுங்குசெய்ய வேண்டும் என்று கேட்டு நிற்கும் பிரேரணை ஒன்று அரசாங்க தமிழாசிரிய சங்க பதுளைக்கிளையின் ஆருவது வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## ஆராய்ச்சியாளர் கண்ட மற்றேரு பெரும் நகரம்

மொஹஞ்சோதாரோ ஹரப்பா நாகரிகத்தை ஒத்த நாகரிகமுள்ள நகரப் புதைபொருள்களை ஆமதபாத்துக் கணமையில் உலோத்தல் என்னுமிடத்தில் புதைபொருளாராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனரென அறிய வருகின்றது.

இருமருங்கும் வீடுகளமைந்துள்ள நான்கு வீதிகள, துறைமுகம் முதலியவாய் சிறந்த நாகரிகத்தின் அறி குறிகள் இவை [illegible] துள்ளன.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 6210-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் 1960-ம்ஆ. பங்குனிமீ 24-ம் உ யைக்கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1960-ம் ஆ. வைகாசி மீ 26-ம் உ வியாழக்கிழமை முற்பகல் 8-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று முதலாவதாக மதிப்பின்படி காணிப்பங்காளருக்குள்ளும் பங்காளர் மதிப்பின்படி கேள்விக்காரராக இல்லாவிட்டால் பிரசித்த ஏலத்திலும் விற்கப்படும்.

விபரம்

கரணவாய் வடக்கு
நமசிவாயம் சின்னத்துரை
—வழக்காளி,

எதிராக

கரணவாய் வடக்கு

1. கதிரன் இராசன், 2. விசுவலிங்கம் செல்லையா, 3. ஆண்டி நாகராசா, 4. முருகன் மாணிக்கம், 5. (இறந்தது) பெண் பொன்னு. 6. பொடியன் பழனி கைம்பெண் பாறி, 7. பழனி சுந்தரன், 8. பழனி அப்பையா, 9. ஆறன் கதிரவேலன், 10. பெண் பூபதி, 11 வேலன் பழனி. 12. பெண் தங்கம், 13. ஆழ்வார் கந்தையா, 14. ஆழ்வான் வல்லி கைம்பெண் நாகி, 15. சின்னவி ஆறுமுகம், 16. பெண் ஆடிய பாதம், 17. நமசிவாயம் மகள் ஈஸ்வரி, 18. நமசிவாயம் சிவநேசன், 19. நமசிவாயம் மகள் நவமணி, 20. நமசிவாயம் மகாதேவன், 21. நமசிவாயம் மகள் கமலாதேவி, 17-ம், 18-ம், 19-ம் 20-ம், 21-ம் எதிராளிகள் சிறுபிள்ளைகள் அவர்களின் பராபரிப்புக்காரன் மாணிக்கம் நமசிவாயம் மூலமாய், 22, சரவணமுத்து தில்லையம்பலம் சிறுபிள்ளை அவரின் பராபரிப்புக்காரன் வயித்திலிங்கம் சரவணமுத்துமூலமாய், 23 தம்பன் கைம்பெண் அம்மா. 24. நாகன் செல்வராசா, 25 பெண் தங்கம்மா, 26 மாணிக்கன் சினித்தம்பி, 27. மாணிககன் நல்லையா, 28. மாணிக்கன் அருச்சுனன், 29. மாணிக்கன் ஆனந்தராசா, 24 — 29 எதிராளிகள் காலஞ்சென்ற 5-ம் எதிராளியின் இடத்துக்கு பதில் எதிராளிகள், 26—29 எதிராளிகள் சிறுபிள்ளைகள் அவர்களின் பராபரிப்புக்காரன் 4-ம் எதிராளிமூலமாய்.

—எதிராளிகள்,

ஆதனங்கள்

1. கரணவாய் நவிண்டிற் குறிச்சியிறை, ஆலொல்லை, உலாந்தா க. வேல்முருகுவால் 1960-ம் ஆ. மாசி மீ 1-ம் உ 3491-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு சொல்லப்பட்ட 6210-ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்ட படத்தின்படி கிந்தமான 1-ம் துண்டுக்கு நில. பர. 5, குளி 7 5/8. கொட்டிலும் எல்லை கிழக்கு றேட்டு. வடக்கு ஒழுங்கை. மேற்கு வேலன் பொடியனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு 2-ம் துண்டு. இது முழுவதும். பெறுமதி ரூபா. 2,809 44.

2. மேற்சொல்லிய ஆலொல்லை என்னும் ஆதனத்தில் மேற்சொல்லிய அளவு படத்தில் கிந்தமான 2-ம் துண்டுக்கு நில. பர. 5. குளி 7 5/8. எல்லை கிழக்கு றேட்டு, வடக்கு மேற்சொல்லிய 1-ம் துண்டு, மேற்கு வேலன் பொடியனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு 3-ம் துண்டு. இது முழுவதும் பெறுமதி ரூபா 2257-08

3. மேற்சொல்லிய ஆலொல்லை என்னும் ஆதனத்தில் மேற்சொல்லிய அளவு படத்தில் கிந்தமான 3-ம் துண்டுக்கு நில பர. 5. குளி 7 5/8. எல்லை கிழக்கு றேட்டு. வடக்கு 2-ம் துண்டு. மேற்கு வேலன் பொடியனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு 4-ம் துண்டு. இது முழுவதும். பெறுமதி ரூபா. 2,052-08.

4. மேற்சொல்லிய ஆலொல்லை என்னுமாதனத்தில் மேற்சொல்லிய அளவு படத்தில் கிந்தமான 4-ம் துண்டுக்கு நில, பர. 5. குளி 7 5/8. எல்லை கிழக்கு றேட்டு. வடக்கு 3-ம் துண்டு. மேற்கு வேலன் பொடியனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு வேலன் வல்லிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும். பெறுமதி ரூபா. 1,219-72.

S. C. Kanagasabai.
கொம்மிஷனர்.

புலோலிகிழக்கு, 3-4-1960.
M 3 8-4-60.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாறல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் மேலானது அருட் செல்வமே

## இம்மை மறுமை இரண்டுக்கும் இன்றியமையாது வேண்டப்படுவது

—0—

அருளுடைமையாவது, உற்ருர் உறவினர் என்னும் தொடர்பு கருதாது ஓரறிவுடைய உயிர்கள் முதல் ஆறறிவுடைய மக்கள் ஈருயுள்ள உயிர்களின் மேல் உள்ள கருணையாகும். இல்லறத்தில் அன்புடைமை சிறந்ததுபோல துறவறத்தில் அருளுடைமை சிறந்ததாகும். ஆகையாற்போலும் திருவள்ளுவர் துறவறவியலில் அருளுடைமையை முதலாவது அதிகாரமாகக் கூறியுள்ளார்.

செல்வங்கள் பலவற்றிலும் சிறந்தது அருட்செல்வமாகும். மற்றைய செல்வங்களாகிய பொருட்செல்வம் முதலியன உயர்ந்தோர்களிடத்தில் மாத்திரமன்றி இழிந்தோர்களிடத்திலும் காணப்படுகின்றன. ஆனல் அருட்செல்வம் உயர்ந்தோர்களிடத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. அருட்செல்வம் மற்றைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகையால் அது உயரிய செல்வம் என மதிக்கப்படுகின்றது. பல வழிகளாலும் ஆராய்ந்து பார்க்கும்போது அஃதே நமக்கு நிலையான

### அருட் குழவி

துணையாகவிருக்கின்றது. எச்சமயக்கொள்கைகளை நாம் ஆராய்ந்து பார்த்தாலும் அவை எல்லாம் அருளுடைமையைப் போற்றுகின்றன. இப்பிறவியில் அருளால் வருகின்ற பயன் மறுபிறவியிலும நமக்கு உறுதுணையாய் நிற்கின்றது. ஆனல் இப்பிறவியில் வருகின்ற பொருள் முதலியவற்றின பயன் நமக்கு மறுபிறவியில் பயன்படமாட்டாது. ஆகையால் எல்லாச் சமயங்களும் சிறந்தது சிறந்தது எனக்கூறும் அருளுடைமையை மேற்கொண்டு நாம் அருளுடையோராதல் வேண்டும்.

இனி அருளுடையோர் அடையும் நன்மைகள்பற்றிச் சிறிது சிந்திப்போம். தன்னைப் போல மற்றைய உயிர்களையும் மதித்து அவற்றின்மேல் கருணையுடையவர்கள் இருள் நிறைந்ததாகிய துன்பத்தைத் தரும் நரக வேதனையை அடையமாட்டார்கள் தமக்கு எதுவாயினும் துன்பம் விளை

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## நாயன்மார்கட்டு ஸ்ரீ பிச்சாடணமூர்த்தி பிரதிட்டா தினம்

—0—

நிகழும் பங்குனித் திங்கள் 28-ஆம் நாள் (10-4-60) பங்குனி உத்தர புண்ணிய தினமாகிய ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராசேசுவரி பேச்சியம்பாள் கோவிலின் வடகிழக்குப் பக்கமாக அமைந்திருக்கும் திருக்குளத்தின் அருகாமையில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பிச்சாடணமூர்த்தியின் பிரதிட்டாதினமாகும். அன்று வழக்கம்போல், முற்பகலில் விசேட அபிடேக ஆராதனைகளும், நண்பகலில் அடியார்களுக்குத் திருவமுதுஅளித்தலும் (அன்னதானம்) இனிது நிகழத் திருவருள் கருணை கூர்ந்துளதென்றும், இத் தினத்தில் அடியார்கள் அபிடேகத் திரவியங்கள் கொண்டுவந்துதவியும், அங்குநிகழும் திருத்தொண்டுகளில் ஈடுபட்டும் செல்லவேண்டுமென்று, ஷை கோவிலின் தர்மகர்த்தா திரு. க. சின்னத்தம்பி அவர்கள் அறியத்தந்து அழைப்பு ஒன்று விடுத்திருக்கின்றுர்.

## முன்மாதிரியாய் விள

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் பெருமை குறித்து பண்டிதர் திரு.S.கந்தையா B.A. அவர்களும், சித்தாந்த சிரோமணி திரு.மு.ஞானப்பிரசம் B.A. B.SC அவர்களும் உரை நிகழ்த்தினர்.

கணேசையர் அவர்கள் தமது வாழ்வில் எதுவித அமைதியை விரும்பினரோ அவ்வமைதி விழாவிற் காணப்பட்டது குறிப்பிடப்பட்டதாகும்.

## அரசியல் அலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமசமாச மணங் கமழும் சிம்மாசனப் பேச்சிலே இடதுசாரிகளின் பிரசாரம் எதிர் ஒலித்திருக்கின்றதே. இன்னும் வலது - இடது என்ற வித்தியாசம் இருக்குமா? எல்லாம் ஒன்றுதான் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் — தமிழ்மொழிக்கு இடங் கொடுக்காத கட்சி ஒன்றுதான் இருக்கின்றது!

## சற்பிரசங்கம்

சுவாமி சத்தியானந்த அவர்கள் மல்லாகம் சைவக் கல்லூரி மண்டபத்திலே பத்திமார்க்கம் என்னும் பொருள்பற்றிப் பேசும் பொழுது அரபிந்த மகாரிஷியின் வாழ்க்கை வரலாற்றிலே கண்கூடாகப் பத்தியின் பயன் காணப்பட்ட குறிப்புகளையும் திருத்தொண்டர்கள் வாழ்க்கைச் சிறப்பையும் அமைத்து அரிய சொற்பெருக்காற்றினர். சமாதான நீதிபதி திரு.ம.செல்லத்துரை அவர்கள் தலைமைவகித்தனர் இந்துசாதன ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினர்.

## பங்கீட்டு அரிசி 25 சதம்

வருகிற திங்கட்கிழமை (11-4-60) திங்கட்கிழமை தொடக்கம் பங்கீட்டு அரிசியின் விலை 25 சதமாக்கப்பட்டுள்ளது.

## கந்தபுராணப் படிப்பு

நிகழும் விகாரி ஹூ பங்குனி மீ 28-ந் தேதி (10-4-60 ஞாயிற்றுக்கிழமை உத்திரத்திலன்று யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் மண்டபத்தில் திருவருளை முன்னிட்டுக் கந்தபுராணப் படிப்பு ஆரம்பமாகி, தினமும் நடைபெறும்.

சைவாபிமானிகள் மேற்படி படிப்பில் பங்குபற்றி இறைவன் திருவருளைப் பெறுவார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்.
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
பங்குனி உசுரு

## பிழை திருத்தம்

1-4-60 ல் வெளிந்த இந்துசாதனப் பத்திரிகையின் 5ம் பக்கத்தில் சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை பற்றி ஸ்ரீசுந்தரராசசர்மா எழுதிய குறிப்பில் இரண்டு தவறுகள் கண்டு வருந்தினேன். திரு. வ. கலியாணசுந்தர முதலியார் பிள்ளையவர்களின் மாணவராயிருந்து அவரால் முன்வந்திருக்க முதலியாரைப் பேரறிஞரோடு கூட்டி அவரைப் பிள்ளையின் ஆசிரியராக ஆக்கியது தலைகீழ் விஷயம். பிள்ளையவர்கள் நீலகிரியைச் சேர்ந்த கூனூரில் இறந்தாரே யன்றிக் கூடலூரில் இறந்தாரல்லர். அவர் கூனூரில் இறந்தபோது மாணவராகிய கலியாணர் கூனூருக்குச் சென்று அவருக்குச் செய்வேண்டிய கருமங்களைச் செய்தார்

சே. வெ. ஜம்புலிங்கம்,
26, காரணேசுரர்கோயில்தெரு,
மயிலாம்பூர், சென்னை 4.

## தேகவியோகம்

பருத்தித்துறை வியாபாரி மூலைவாசியும், அரசாங்கக் கச்சேரிகளில் தலைமைச் சிறப்பராயிருந்து இளைப்பாறுகின்றவருமாகிய திரு. எஸ். கே. ஆழ்வார்ப்பிள்ளையவர்களின் பிரிய பத்தினியார் அன்னம்மா அவர்கள் தமது 60-ம் வயதில் பங்குனி ௯உ (22-3-60) செவ்வாய்க்கிழமை இறைவன் திருவருள் வழி இவ்வுலக வாழ்வை நீத்தார். அடுத்த நாளாகிய புதன்கிழமை அன்னரின் ஈமக்கிரியைகள், அன்னரின் புத்திரராற் சைவமுறைப்படி சிறப்பாகச் செய்யப்பெற்றன. அத்தருணம் சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக வரித்தனுப்பிய ரூபா மூன்று அன்புடன் ஏற்ரும்.

சிவபக்தியுடன் பதிவிரதா தர்மத்தைச் சிறப்பாக மேற்கொண்டொழுகிய அம்மையார் இறைவன் திருவருளால் ஆன்மசாந்தியடைவாராக.

— அதிபர்,

## விவேகானந்த வித்தியாலயம், கொழும்பு

பொருட்காட்சி, பெற்ருர்தினம், பரிசளிப்பு, நடனமன்ற விழா இன்று பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் திரு. வெ. சங்கலிங்கம் பீ. எஸ்சி. (லண்டன் மேற்கு மாகசணப் பகுதி வித்தியாதிகாரி தலைமையில் நடைபெறும். திருமதி. வெ. சக்கரலிங்கம் பரிசுகளை வழங்குவார்கள், பொருட் காட்சியை திரு. திரு இரா. சபாநாயகம், ஓ. பீ ஈ. ஜே பி கொழும்பு விவோானந்த சபைத் தலைவர் 7-4-60 வியாழக்கிழமை காலை 10 மணிக்குத் திறந்துவைத்தார்கள்.

## திருவாவடுதுறை ஆதீனகர்த்தரின் ஜன்மநட்சத்திர விழா

—0—

கொள்ளிடம் மார்ச் 31—

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது பட்டம் குருமகாசந்நிதானம் தவப்பெருந்திரு. சுப்பிரமணிய தேசிகரின் ஜன்மநட்சத்திர விழாவும்" ஆதீனத்தின் சொந்தக் கிராமமான எடுத்தணிவயல் ஸ்ரீபஞ்சாட்சர விநாயகர்இலட்சார்ச்சனைபூர்த்தி விழாவும் 30-3-60 அன்று நடைபெற்றபோது ஆதீன மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் இயற்றியுள்ள கணபதி மூலமந்திரபஞ்சரத்தினப் பாமாலையையும், தவப்பெருந் திரு. குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிவாழ்த்து மலரையும் ஆதீன பிரதம சங்கீத வித்துவானும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இசைக்கல்லூரியின் முதல்வருமான இசையரசு திரு எம். எம் தண்டபாணி தேசிகர் ஸ்ரீ பஞ்சாட்சர விநாயகப்பெருமான் சந்நிதியின் முன்பு வாசித்து தவப்பெருந்திரு குரு மகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளில் சமர்ப்பித்துள்ளார்.

## அன்பில்லா வாழ்க்கை பயனற்றதாகும்

அன்பின் இறுதி எல்லையே ஞானம் எனப்படும் உயிரின் சுயசொரூபமே அன்பாகும். அன்பில் இன்பமும் இன்பத்தில் அன்பும் நிறைவுடையன. அன்பு விரிவடையாவிடில் நம் வாழ்வே அர்த்தமற்றதாகிவிடும்.

அன்பு மக்களிடம் குடிகொள்ளும்போது அது சமூகப் பொருளாக மாறுகிறது. மக்கள் நலத்திலும் முன்னேற்றத்திலும் இன்பம் உதயமாகும். உள்ளன்புடன் செய்யும் உதவிகளால் உண்மையான சாந்தி ஏற்படும். இதுவே இறைபணியுமாகும்.

நடமாடும் கோயில்களாகிய மக்களுக்கோ மற்றும் உயிர்களுக்கோ நாம் செய்யும் பணிகள் உண்மையில் ஈசனுக்குச் செய்யும் பணிகளே.

சமயப் பெரியார்கள் சமூகப் பெரியார்கள் ஆகியோரின் வாழ்க்கைச் சரித்திரங்களை மாணவர்கள் படித்துச் சிந்திக்க வேண்டியதுடன் அவர்களிடத்தே காணப்பட்ட சீரிய பண்புகள் வளரத் தொழிற்பட இடமளிக்கவும் வேண்டும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பிறருக்குத் தீமை செய்யக்கூடாது.

நெல்லியடியில் அளிக்கப்பட்ட வரவேற்பிற் பேசும்போது கோலாலம்பூர் ஸ்ரீமத் சுவாமி சச்சிதானந்தா அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

## பதநீர்த் தடை நீக்கம்

—0—

பதநீர் சேர்ப்பதற்கும் சேர்க்கு மிடத்திலிருந்து கொண்டுபோதற்கும் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி எம் சாமி
தங்கபஸ்பம்
உபயோகியுங்கள்.
தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறுஇல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம், இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது.
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.
தாளக பஸ்பம் ஈளை, இளைப்பு, தொய்வு, இருமல், கடின சுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.
24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனம்.
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S I.

## நன்றியறிவித்தல்

பருத்தித்துறை வியாபாரிமூலைவாசியும், அரசாங்கக் கச்சேரிகளில் தலைமைச்சிறப்பராயிருந்து இளைப்பாறுகின்றவருமாகிய திரு. எஸ், கே. ஆழ்வார்ப்பிள்ளையவர்களின் பிரிய பத்தினியார் திருமதி அன்னமமா அவர்களின் தேகவியோகத்தொடர்பில் சமுகமளித்தும், தந்தி, தபால்மூலமும் அனுதாபம் தெரிவித்த சுற்றமித்திரருக்கு திரு. ஆழ்வார்ப்பிள்ளையவர்களும், புத்திரரும் தங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

M 6 8—4—60.

## மின்சார வெளிச்சக் கைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் விளையாட்ட விழாத்தொடர்பில் நடைபெறவிருக்கும் மின்சார வெளிச்சக் கைப்பந்தாட்டப் போட்டியில் 15 குழுக்கள் பங்குபற்றவிருக்கின்றன: "செற் அப் கேம்" போட்டியில் 5 குழுக்களும் சாதாரண போட்டியில் 10 குழுக்களும் கலந்துகொள்ளும். புதுவருடப்பிறப்பை யடுத்துப் போட்டி ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய்
1. சுந்தரம்பிள்ளை பாலரத்தினம்
2. பாலரத்தினம் பெண் பரமேஸ்வரி
—வழக்காளிகள்.

வழக்கு இல; M.B. 1535

எதிராக

மானிப்பாய், தன்னை
1. குட்டி வல்லி
2. பொன்னன் அருமைத்துரை
3. அருமைத்துரை பெண் அன்னம்மா
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 1535-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1960-ம் வருடம் சித்திரை மாதம் 30-ந்திகதி(30-4-60) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிகட்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1293-33 சதமும், 8-3-57 தொடக்கம் 6-6-57 வரைக்கும் ரூபா 800-க்கு 10 வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா. 212-25 சதமும்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய் கோயிற்பற்று மானிப்பாய் இறை, "பெரியபுலம்" (Periyapulam) நிலப்பரப்பு 4 செய்பயிர், வான் பயிர்களும், பனைகளும். எல்லை கிழக்கு சூரியன் வேலனின் காணி, வடக்கும் மேற்கும் கோணன் குட்டியனுக்கும் பெண் மாரிமுத்துவுக்கு முரிய காணி, தெற்கு சின்னட்டியன் கந்தனின் காணி. இந்த எல்லைகட்கு உட்பட்ட காணியில் வடக்குக் கரையில் மேற்குக் காணிக்குரிய 4 முழ அகல கையொழுங்கைப் பாவிப்புரிமை தவிர. மீதி அடங்கலும், அதன் உடமைகளும். வடகிழக்குப்பக்கத்தில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும், தூர்வை வழி வாய்க்கால் உரிமையும். கிழக்கில் மேற்குப்பக்கமாகவும் வடக்குப்பக்கமாகவும் அதன்பின் மேற்குப்பக்கமாகவும் நோககியிருக்கும் பிரசித்த ஒழுங்கையிலிருந்து வரும் 4 முழ அகல கையொழுங்கை உரிமையும், வடக்கெல்லையாகக் கொண்ட எதிரியின் காணி கிழக்கு கரையோரமாக இந்தக் காணக்குரிய 4 முழ அகல பாதை உரிமையும். H, 239/293-ல் பதியப்பட்டது.

2. ஷை வலிகாமம் வடக்குப் பகுதி, உடுவில் கோயிற்பற்று, 'ஈச்சந்தனை' (Eachchanthanai) நிலப்பரப்பு 7 குளி $10\frac{1}{4}$. இத்துண்டு உலாந்தா S. முத்துக்குமாரசாமி அவர்களால் தயாரிக்கப்பட்ட 2-11-50/57-ம் இலக்கப் படத்தில் இலக்கம் 1 என குறிக்கப்பட்டது, தண்ணீர்ப் பங்கும், கிணற்றிலிருந்து முறையாக ஒரு நாளைக்குத் தண்ணீர் இறைக்கும் உரிமையும். தூர்வைப் பங்கும், துலா, ஆடுகால் உரிமையும் குறிப்பிட்ட படத்தில் இலக்கம் 7 என குறித்த காணி பாவிப்புரிமையும் எல்லை கிழக்கு குறிப்பிட்ட படத்தில் இலக்கம் 6 என காட்டியுள்ள பாதை. வடக்கு சிவப்பிரகாசம் பெண் பாக்கியத்துக்கும் செல்லத்துரை பெண் பொன்னம்மாவுக்குமுரிய காணி. மேற்கு ஆறுமுகம் தெட்சணாமூர்த்திக்கும் மற்றையோருக்குமுரிய காணிகள். தெற்கு கதிரன் தர்மலிங்கத்தின் காணியும் கிணறும் பாதையும். இதடங்கலும். H 256/238-ல் பதியப்பட்டது.

3. ஷை உடுவில் இறை, "ஈச்சந்தனை' (Eachchanthani) நிலப்பரப்பு 20, இதில் சொரியலாக ½ பங்கில் கிழக்கு ஒழுங்கையிலிருந்து போக்கு வரவு செய்ய பாதைக்காக விடப்பட்ட 1 பரப்புக் காணி எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு கணபதிப்பிள்ளை பெண் கனகம்மாவின் காணி. மேற்கு மேற்குறிப்பிட்ட 2-வது ஆதனம், தெற்கு மருதுகணபதியின் ஆதனம். இந்தநிலப் பரப்பு ஒன்றில் சொரியலாக 1/3 பங்கு. H 257/190.ல் பதியப்

## சார்வரி வருடப்பிறப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

யடைய வேண்டுமென்று நினைத்து எவ்வாறு ஸ்நானம் செய்கின்றோமோ, அவ்வாறே நம் உள்ளமும் தூய்மையடைய வேண்டுமென்று நினைத்தே ஸ்நானம் செய்தல் வேண்டும். இச் சாதனையைச் சைவ நூல்கள் கூறுகின்றன. ஆனால், அவ்வாறு தினமும் உள்ளத் தூய்மை பெற முயல்வோர் மிகச் சிலர் என்றே சொல்லலாம். ஆகவே, நாமெல்லோரும் புது வருஷம் பிறக்கும் சுப நேரத்தில் மங்கள ஸ்நானம் செய்கையில், மேற் கூறப்பட்ட தீய செய்கைகள் நம்மை யடையாவண்ணம் இறைவனைப் பிரார்த்தித்து அதன்பின் புத்தாடை அணிந்து, ஆலயம் சென்று அமலன் பாதம் தொழுது பெரியவர்களை வணங்கி, உற்றார் உறவினருடன் அளவளாவி உண்டு மகிழ்ந்து, அன்றுபோல் என்றும் மகிழ்வோடும், மனவமைதியோடும் வாழ்வோமாக.

——

## அகத்தூய்மையா......

1-ம் பக்கத்தொடர்ச்சி

நாமென்று நினைக்கின்றோம். நாம் என்றென்றுமுள்ள ஆன்மா என்று நினைப்பதில்லை. மனத்தை வெளியே செல்ல விடுவதால் நாம் அடையக்கூடிய உண்மையான நன்மை எதுவுமில்லை. எங்கள் மனத்தை அகமுகமாய்த் திருப்பி இடைவிடாது இறைவனைத் தியானித்து வழிபட வேணடும்; இருளையகற்றி ஒளியைப் பரப்புமாறு எம்மை இறைவனிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

இளகாத எந்த நிலைமையையும் அன்பானது இளகச் செய்யும் தன்மையது. தண்ணீரிலோ வேறு எந்த ஒரு நீர்ப்பொருளிலோ கரையாத பொருளொன்றுண்டென்று வைத்துக் கொள்வோம். கரைக்கும் பொருளொன்றை அதில் இடுகின்றோம். கரையாத அந்தப்பொருள் இப்பொழுது கரைகின்றது. இங்கே இடப்பட்ட கரைக்கும் பொருள்போன்றதே அன்பு. அன்பானது உயிரைக் கரைத்து இறைவனுடன் இரண்டறக் கலக்கச் செய்கின்றது.

எங்கள் அயலவரை நாங்கள் ஏன் நேசிக்கின்றோமில்லை? குறுகிய எல்லைக்குட்பட்ட எங்கள் அன்பு விரிந்து பரவாமையாலேயே. கடவுள் இருப்பது வானத்திலல்ல. அவர் எங்கள் இருதயத்திலேயிருக்கின்றார். அவரைக் காண்பதற்கு நாங்கள், எம்முள் ஆழமாய்ப் போக வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் எந்த நேரமும் இறைவனைச் சந்திப்போமாக, எந்த நேரமும் இறைவனைப்பற்றிப்பேசுவோமாக. இவ்வாறு செய்தற்கு வேண்டிய வலியை இறைவனிடம் வேண்டிப்பெறுவோமாக.

(சுயதூய்மைபற்றி ஸ்ரீ சுவாமி இராமதாசரவர்கள் வெளியிட்ட கருத்துரை ஒன்றின் சாரம், விஷன் பத்திரிகையிலிருந்து பெயர்க்கப்பெற்றது).

இரண்டாம் மூன்றும் காணிகளுக்கு மூன் ஈடும் ஒன்றுண்டு

சே. பாண்டித்துரை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
Commissioner of Sales and Valuer

மல்லாகம் 14-3-60.
M. 5 8-4-60.

## செல்வங்கள் எல்லாவற்...

5-ம் பக்கத் தொடர்ச்சி

யுமோ என்று அச்சத்தைக் கொடுக்கும் பாவங்கள் அவர்களால் உண்டாகமாட்டா. அவர்களுக்கு ஒரு துன்பம் வருவதில்லை. இவ்வுலகில் வாழும் அருளாளர் இதற்குச் சாட்சியாவார்கள்.

இப்பிறப்பிலே அருளை மறந்து கொடிய தொழில்களைச் செய்கின்றவர்கள், முற்பிறப்பிலே அருளுடைமைப் பண்பைப் பெருமையால் இப்பிறப்பிலே துன்பப்படுகின்றனர் என்பதை அன்னவர் மறந்தனர் என்று கற்றுணர்ந்தோர் சொல்லுகின்றார்கள். பொருளிலலாதவர்கள் எப்படி இந்நிலவுலகத்தில் இன்புற்று வாழமாட்டார்களோ அப்படியே உயிர்கள்மீது அருளில்லாதவர்கள் மறுமையில் வாழமாட்டார்கள். அதாவது, இம்மைக்கு எப்படிப் பொருள் இன்றியமையாததோ அப்படியே அருள் மறுமைக்கு இன்றியமையாததாகும்.

பொருளில்லாது வருந்துகின்ற வறிய மக்கள் ஒரு காலத்து வறுமை நீங்கிச் செல்வராக மாறுவார்கள். ஆனால் உயிர்களிடத்து அருளில்லாதவர் ஒருகாலமும் அருளுடையவர்களாகமாட்டார்கள். ஆகையினாலே அன்பு முதிர்ந்து வளர்ந்த மக்கள் அருளுடைமையை வளர்த்தல் வேண்டும். தெளிந்து அறிவில்லாதவன் உண்மைப் பொருளைக் கண்டதுபோல அருளில்லாதவன் செய்யும் அறம் பயனற்றதாகும். ஞான நூல் அறிவில்லாத ஒருவன், மெய்ப்பொருளை உணர்ந்து அதனைக் கடைப்பிடிப்பான்போல ஒழுகினால் ஞானநூலறிவில்லாதவனுகையால் சிறிது காலத்தில் அதனைக் கைவிட்டுவிடுவான். அதனால் வரும்பயன் அற்றுப்போகின்றது. அதுபோலவே, உயிர்கள்மீது அருளில்லாதவன் செய்யும் அறம் அவனுக்குப் பயனை அளிப்பதில்லை. ஆகவே மனிதர்கள் யாவரும் அருளுடையோராக இருத்தல் வேணடும், அருளில்லாத ஒருவன தன்னிலும் மெலியோன் ஒருவனை வருத்தும்போது அவன் தன்னிலும் வலியோன் ஒருவன் தன்னை வருத்தும்போது தான் அவர் முன் பயந்து நிற்கும நிலையை நினைக்கவேண்டும். இவ்வாறு நினைக்கும்பொழுது அருளுடைமையின் இன்றியமையாமை தெளிவாகின்றது.

அருளுடைமை மனிதனுக்கு இன்றியமையாதென்பது வள்ளுவர்கூறிய அருள் வாக்குகளால் நன்கு விளங்குகின்றது. அது நமக்கு இம்மை மறுமை இரண்டிலும் ஒரு துணையாய் விளங்குவதாகும்.

——

இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கிறது!

**பலவிருத்திக் குளிகை**

இது ஆச்சரியமான குணம் உடையது

அசதி, பலவீனம், உடல்மெலிவு, நரம்புததளர்ச்சி, மறதி தாது பலவீனம் முதலியவைகளை நீக்கி புதிய இரத்தத்தை நரம்புகளுக்குள் புகுத்தி இழந்துபோன பலத்தையும் வலிமையையும் மீட்டிக்கொடுத்து வாழ்க்கையை வளம்பெறச் செய்விக்கிறது. 120 குளிகை புட்டி 1 க்கு ரூ. 12-00,

**மூல வியாதிக்கு**

நாக பஸ்பம், கருணை லேகியம் சாப்பிடுங்கள்
ஆப்ரேஷன் அவசியமில்லை. முளை தானே கரைந்துவிடும்.
சீழ் மூலம், இரத்தமூலம், மலபந்தம், குத்தல் கடுப்பு முதலிய 9-வித மூல வியாதிகளும் குணமாகிறது.
பஸ்பமும், லேகியமும் 24 நாள் செட் விலை ரூ. 20-00

**மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S.I.**

## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] இவ்வாரப் பலன்கள்
எங்கள்சோதிடம் 10-4-60—23-4-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

சிறிது காலத்துக்குத் தேகசுகம் விசேட கவனம் கொடுக்கப்பட வேண்டும். காய்ச்சற் கோளாறுகளுக்கும் கண் நோய்களுக்கும் இடமுண்டு 14-ம், 15-ம், 16-ம் நாள் காலை கவனமாய்க் கழிக்க வேண்டும். பணத்துறையில் நல்ல காலம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இவ்விருவாரத்திலும் வழக்கத்திலும் பார்க்க வேலை கூடுதலாயிருக்கும். மனச்சமாதானமிருக்க மாட்டாது. சுகவீனங்களுக்கிடமுண்டு. இம்மாதம் 16-ந் திகதி பிற்பகல் 17-ந் திகதி 18-ந் திகதி உம்முடைய கருமங்களில் நீர் மிகக கவனமாயிருக்க வேண்டும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

பணத்துறையில் நல்ல காலம். உம்முடைய நண்பர் அதிக உதவியாயிருப்பர். உத்தியோக சித்தியும் பகைவர் அழிவுக்கும் இடமுண்டு ஆனல் இம்மாதம் 18உ பிற்பகல் 19-ம், 20-ம் திகதிகளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

இவ்விருவாரத்தில் சில எதிர்ப்பையும் உம்முடைய முயற்சிகளில் இடைஞ்சல்களையும் நீர் முன்னிட வேண்டிவரும். ஆனல் அவை எல்லாவற்றையும் நீர் நீங்கக் கூடியதாயிருக்கும். 20-ந் திகதி பிற்பகல், 21-ந் திகதி 22-ந் திகதியைக் கவனமாய்க்கழிக்கவும்,

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

பணக்கருமங்களுக்கும் உத்தியோக கருமங்களுக்கும் நல்ல காலம். புது முயற்சிகள் தாமதிக்கப்படும். ஆனல் சித்தியாகும். ஆனல் மனச் சமாதானமிருக்க மாட்டாது. பிதாவழி இனத்தவர் உமக்குச் சில இடைஞ்சல்களை உண்டாக்கக்கூடும் இருவாரத்தின் கடைசி இருநாட்களையும் கவனமாய்க் கழிககவும்,

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

சிறிது காலத்துக்குத் தேகசுகம் சிக்கலாயிருக்கும். குடும்ப விலைமைகளும் சிறிதும் நல்லாயிருக்க மாட்டா. குடும்பத்தில் பிழை எண்ணப் உண்டாகும் ஆனல் பகைவர் அழிவுக்கு இடமுண்டு.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இவ்விருவாரத்தில் குடும்பக் கருமங்கள் குழப்பமாயிருக்கும். குடும்பத்திலுள்ள பெண்கள்மூலம் சண்டைகளுக்கிடமுண்டு. தேகசுகமும் சிறிதும் நல்லாயிருக்க மாட்டாது. வயிற்றுக்கோளாறுகளுக்கிடமுண்டு.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணத்துறையில் நல்ல காலம். இடைஞ்சல்களில்லாமல் உம்முடைய முயற்சிகளை முன்னேற்றக் கூடியதாயிருக்கும், பகைவர் அழிவுக்கிடமூண்டு, ஆனல் மாதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது துன்பமுண்டாக்கக்கூடும், மாதாவின் சுகமும் பாதிக்கப்படக் கூடும்,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

தேகசுகம் இருவாரத்திலும் சிக்கலாயிருக்கும். புது முயற்சிகள் தாமதிக்கும். ஆனல் சித்தியாகும், சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர். வேலை வழக்கத்திலும்கூடுதலாயிருக்கும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

நீர் இந்த வாரம் சண்டை தொடுக்க முந்துவீர். கண் நோய்களுக்கிடமுண்டு. வாகனங்கள் அதிக செலவை உண்டாக்கும், குடும்பச் சூழலில் அவமானங்களுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

சிறிது காலத்துக்குத் தேகசுகம் சிக்கலாயிருக்கும். மனச்சமாதானமிருக்கமாட்டாது. உத்தியோகத் துறையில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் நல்ல பலனைத்தரும். சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

நீர் சித்தியடைதற்கு இவ்விருவாரத்தில் முயன்றுழைக்க வேண்டும். சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு. காத்திராத வகையில் நீர் சிறிது பிரயாணஞ் செய்ய வேண்டிவரக்கூடும்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 8-4-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org